**கவனிக்க**.- இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2019 ஆம் ஆண்டிற்கான கேகாலை மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2110 - 2019 පෙබරවාරි මස 08 වැනි සිකුරාදා - 2019.02.08

2110 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 30 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, மாச்சு மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

29-B81492-353(2019/02)

# நானாவித அறிவித்தல்

## கொழும்பில் நடாத்தப்படும் மேல் மாகாண உயர் நீதிமன்றத்தில்

குடியியல் நீதிமன்ற நியாயாதிக்கத்தை அமுல் படுத்தும் போது கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண நீதிமன்றத்தில் ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழாக நீதி மன்றத்தால் கம்பனியை கலைப்பது தொடர்பான வேண்டுதலுக்கமைவானது, டுவர் ஈஸ்ட் (லங்கா ) லிமிடட், இல. 455, கீழ்மாடி, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.

வழக்கு இல. : 81/2018 Co

– எதிர் –

கலைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கம்பனி எதிராக தெவின் ரெடொல்பே பெரெய்ரா, இல. 52/03, ஜயகத் வீதி, நாவின்ன, மஹரகம.

*முறைப்பாட்டாளர்*

கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் ( சிவில் நீதிமன்ற அதிகாரம் நடைமுறைப்படுத்தப்படும்) உயர் நீதிமன்றத்தால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட டுவர் ஈஸ்ட் (லங்கா) லிமிடட் கம்பனியின் கணக்குகள் முடிக்கப்பட்டு மூடப்படுவதற்கான முறைப்பாடொன்று மஹரகம, நாவின்ன , ஜயகத் வீதி, இல. 52/03 இல் வதியும் தெவின் ரெடொல்பே பெரெய்ராவினால் 2018 ஆம் வருடம் ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும், மேற்படி முறைப்பாடு 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி உயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிப்பதற்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளதுடன் மேற்படி முறைப்பாட்டின் மீது கட்டளையிடுவது தொடர்பாக ஆதரவு வழங்க எதிர்பார்க்கும் மேற்படி கம்பனியின் எந்தவொரு கடனாளி அல்லது பங்காளர், வழக்கு விசாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் , அந்த செயற்பாடு தொடர்பாக தமது சட்டத்தரணி மூலம் ஆஜராக முடிவதுடன் மேற்படி கம்பனியின் கடனாளி அல்லது பங்காளருக்கு தேவையேற்படும் பட்சத்தில், அது தொடர்பான குறித்த கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர், கீழே கைச்சாத்திடப்பட்டவர்களால் முறைப்பாட்டின் பிரதியொன்று வழங்கப்படுமென இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சனத் விஜேவர்தன,
சட்டத்தரணி,
நீதிமன்ற வீதி,
கொழும்பு -12.

**குறிப்பு**: மேற்படி முறைப்பாடு விசாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அங்கு ஆஜராக விரும்பும் தமது விருப்பத்தை தெரிவிப்பதற்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணி சனத் விஜேவர்தனவிற்கு எழுத்து மூலம் வழங்க வேண்டும். அவ்வாறில்லையெனில் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் . அறிவித்தல் வழங்கும் நபரின் பெயர் மற்றும் முகவரி என்பன குறிப்பிடப்படல் வேண்டும். அவ்வாறில்லையெனில் கம்பனியெனின், கம்பனியின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட வேண்டியதுடன் அதில் குறித்த நபரால் அல்லது கம்பனியால் அவ்வாறில்லையெனில் (இருப்பின்) அவரின் (ஆண்/பெண்) சட்டத்தரணி மூலம் கையொப்பமிட வேண்டியதுடன் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி பி.ப. 4.00 மணிக்கு முன்னர் மேற்படி பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு கிடைக்கக் கூடியவாறு ஒப்படைக்கப்படல் வேண்டும். அவ்வாறில்லையெனில் தபால் மூலம் அனுப்பப்படுவதானால் அது தொடர்பாக போதியளவு காலத்தை உள்ளடக்கியதாக தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்

சனத் விஜேவர்தன,
சட்டத்தரணி.

இல. 28, வில்சன் வீதி,
நீதிமன்ற வீதி,
கொழும்பு 12.

2-362

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.